# வணிகக்கல்வி

## 2.3 வணிகங்களின் வெற்றிக்கு ஒழுக்க விழுமிய முறைமையொன்றின் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவர்



e-தக்சலாவ கல்விக்கூடம்
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

## வணிக ஒழுக்க விழுமியங்கள்

**வணிக நிறுவனம் ஒன்று தனது செயற்பாடுகளை மேற்கொள்கின்ற போது நல்லவை தீயவை தொடர்பாக சரியாக விளங்கிக்கொண்டு செயற்படுத்தலாகும். அதாவது நல்லவற்றைச் செய்தலும் தீயவற்றை செய்யாது இருப்பதுவே வணிக ஒழுக்கமாகும்.**

**பின்வரும் விடையங்கள் தொடர்பில் வணிக ஒழுக்கங்களை பின்பற்றுதல் அவசியம்**

### 1. உற்பத்தி தொடர்பானது

⇒ தரமான பொருட்களை நியாயமான விலையில் வடிக்கையாளர்களுக்கு வழங்குதல்

⇒ சூழல் மாசடைவதை தவிர்க்க கூடியதாக உற்பத்திகளைச் செய்தல்

⇒ பாவணைக்குப் பொருத்தமற்ற இரசாயனப் பதார்த்தங்கள் உள்ளடங்கிய உணவுப்பொருட்களை உற்பத்தி செய்யாதிருத்தல்

⇒ கதிர்வீச்சு அதிகம் கொண்ட உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யாதிருத்தல்

### 2. சந்தைப்படுத்தல் தொடர்பானது

⇒ போலியான விளம்பரங்களை மேற்கொள்ளாதிருத்தல்

⇒ போலியான உத்தரவாதங்களையும், தகவல்களையும் வழங்காதிருத்தல்

⇒ முறையற்ற விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல்

⇒ பிளையான விலையிடல் முறைகளை பின்பற்றாதிருத்தல்

⇒ போட்டி நிறுவனங்களைப் பாதிக்கும் வகையிலான விளம்பரங்களை மேற்கொள்ளாதிருத்தல்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

### 3. நிதித் துறை தொடர்பானது

⇒ நிதி மோசடிகள் மற்றும் முறைகேடுகளைத் தவிர்த்துக் கொள்ளல்

⇒ சொத்துக்களின் பெறுமதிகளை உயர்த்திக் காட்டுவதைத் தவிர்த்தல்

⇒ செலவுகளை அதிகரித்துக் காட்டுதல் அல்லது வரி செலுத்த வேண்டிய இலாபங்களை குறைத்துக் காட்டுவதைத் தவிர்த்தல்

### 4. மனிதவளம் தொடர்பானது

⇒ தொழில் வழங்குனர், தொழில் பெறுநர்களின் உரிமைகள் கடமைகளைப் பாதுகாத்தல்

⇒ ஊழியர்களின் சாதி, குல, சமய, பால் வேறுபாடுகளின்றி சமமாக நடாத்துதல்

⇒ தொழில் பாதுகாப்பு, சுகாதாரப் பிரச்சனை, ஓய்வு வசதி போன்றவை தொடர்பில் கவனம் செலுத்துதல்

### 5. விவேகச் சொத்துக்கள் தொடர்பானது

விவேகச் சொத்துக்கள் மூலம் உரியவர்கள் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அதனை வேறு நபர்கள் சட்டரீதியற்ற வகையில் பயன்படுத்தாது இருப்பதற்கு ஒழுக்க நெறி அவசியமாகும். இதனடிப்படையில்.

⇒ ஆக்கவுரிமைகளைப் பயன்படுத்துதல்

⇒ வெளியீட்டு உரிமைகளைப் பயன்படுத்துதல்

⇒ வியாபார குறியீட்டினைப் பயன்படுத்துதல்

⇒ ஊழியர் திறன்களை முறையற்ற வகையில் பயன்படுத்தாது இருத்தல்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வணிக ஒழுக்க விழுமிய முறைமையொன்றினைக் கட்டியெழுப்பும் போது கவனம் செலுத்த வேண்டிய தரப்பினர்கள்

- வணிகம்
- வாடிக்கையாளர்
- ஊழியர்
- போட்டியாளர்
- சமூக கலாச்சாரம்
- நிறுவனக் கலாச்சாரம்
- நடைமுறை ரீதியானது

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திரு. K.சிவலிங்கம் (ஆசிரியர்

கணினி வடிவமைப்பு : திரு..பு.கமலாகரன் (த,தொ,தொ - ஆசிரியர், யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

| தரப்பினர்கள் | ஒழுக்க விழுமியம் தொடர்பாக கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் |
|---|---|
| வணிகம் | வணிகத்தின் தன்மை(பொருள் உற்பத்தி வணிகமா? சேவை உற்பத்தி வணிகமா?, சிறு அளவு வணிகமா?, பேரளவு வணிகமா?) என்பதை கவனத்தில் கொள்ளல் |
| வாடிக்கையாளர் | வாடிக்கையாளரின் கேள்விநிலைமை, தொடர்பாடல், சமய சமூகக் கலாச்சரத்துடன் தொடர்புடைய விடயங்கள் போன்றன. |
| ஊழியர் | ஊழியர் வாழும் பிரதேசம், அவர்களின்சூழல், தேவைகள் விருப்பங்கள் போன்றன |
| போட்டியாளர் | போட்டியாளர்கள் காணப்படுகிறார்களா? அவர்கள் பின்பற்றும் ஒழுக்க விழுமியங்கள் எவை? போன்றன கவனத்தில் கொள்ளல். |
| சமூக கலாச்சாரம் | பின்பற்றுகின்ற கலாச்சார விழுமியங்கள், பெறுமானங்கள், துணைச்செயற்பாடுகள், நடைமுறைப்படுத்தப்படும் ஒழுக்க விழுமிய முறைகள் என்பன கவனத்தில் கொள்ளப்படும். |
| நிறுவன கலாச்சாரம் | வணிகத்தில் காணப்படுகின்ற மரபுகள், பாரம்பரியங்கள், பெறுமானங்கள், பழக்கவழக்கங்கள், மனப்பாங்கு போன்றன தொடர்பில் கவனம் செலுத்துதல். |
| நடைமுறை ரீதியானது | ஒழுக்க விழுமிய முறை ஒன்றினைத் தயாரிக்கும் போது அதனை நடைமுறை ரீதியாக செயற்படுத்துவதற்கான ஆற்றல் காணப்படுகின்றது என்பது தொடர்பாக கவனம் செலுத்துதல். |

**வணிகம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட ஒழுக்க விழுமியத்தினை எழுத்து வடிவில் காட்டும்போது அது ஒழுக்க விழுமிய கோவை என அழைக்கப்படும்**

தொகுப்பு : திரு. K.சிவலிங்கம் (ஆசிரியர்

கணினி வடிவமைப்பு : திரு..பு.கமலாகரன் (த,தொ,தொ - ஆசிரியர், யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk